# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

CC.No.5/2022

Deposition of witness for Prosecution – PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடேஷ் | Caste | : |
| S/o. | : அருணாசலம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 05.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தண்டா 4 ரோடு, கொளத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் பார்வை மகசரில் உள்ள வெங்கடேஷ் என்ற கையெழுத்து என்னுடையது இல்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர்

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை</u> :

போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையின்போது 16.12.2016ம் தேதி காலை 10.00 மணிக்கு என் சொந்த வேலையாக காவல்நிலையம் வந்தபோது ஆஜர் எதிரியை எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தையின்றி ஆய்வாளர் விசாரித்தார் என்றும் அப்போது எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் தான் தனது மனையின் பெயரில் டிப்பர் லாரி வாங்கி அரசுக்கு சொந்தமான செட்டிப்பட்டி காவேரி ஆற்றுப்படுகையில் உள்ள மணலை அதிக லாபத்திற்கு விற்பதற்காக மணலை ஏற்றி வந்ததை ஒப்புக்கொண்டார் என்றும் அதன் நானும் சிவா என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றும் பின்னர் 11.00 மணி அளவில் சம்பவம் நடந்த சம்பவ இடத்தை ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார் என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.